கொளத்தூர் எம்எல்ஏ வி.எஸ்.பாபுக்கு தீவிர சிகிச்சை

அமைச்சர் அருண்ராஜ்

சென்னை, நவ. 6: சென்னை கொளத்தூர் தொகுதி எம்எல்ஏ வி.எஸ்.பாபுக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கே.ஜி. அருண்ராஜ் தெரிவித்தார்.

உடல்நலக் குறைவு காரண மாக தவெக எம்எல்ஏ வி.எஸ். பாபு, கடந்த செப். 9-ஆம் தேதி சென்னை நெல்சன் மாணிக் கம் சாலையில் உள்ள எம்ஜி எம் ஹெல்த் கேர் மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனும திக்கப்பட்டுள்ள அவருக்கு பல் துறை மருத்துவர்கள் குழுவினர் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

முதல்வர் விஜய் அண்மையில் மருத்துவமனைக்குச் சென்று அவரை சந்தித்து நலம் விசாரித் தார். வி.எஸ்.பாபு மருத்துவம னையில் அனுமதியானதிலிருந்து, அவரது உடல்நிலை குறித்து மருத்துவமனை நிர்வாகம் அறிக் கைகளை வெளியிட்டு வந்தது. ஆனால், கடந்த 3 வாரங்களுக்கு மேலாக எந்த அறிக்கைகளும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், இது குறித்து அமைச்சர் அருண்ராஜ் செய்தியா ளர்களிடம் கூறுகையில், 'வி.எஸ். பாபு தீவிர சிகிச்சைப் பிரிவில் உள் ளார்; அவருக்கு தொடர் கண்கா ணிப்பு அளிக்கப்பட்டு வருகிறது. விரைவில் அவரது உடல்நிலை குறித்து அறிக்கை வெளியாகும்' என்றார்.

திண்டுக்கல்லில் மணல் ஒப்பந்ததாரர் வீட்டில் ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் சோதனை

திண்டுக்கல், நவ. 6: திண்டுக்கல்லைச் சேர்ந்த மணல் ஒப்பந்ததாரர் வீடு, அலுவலகங்களில் ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் வெள்ளிக்கிழமை சோதனை நடத்தினர்.

திண்டுக்கல் ஜிடிஎன் சாலையில் வசித்து வருபவர் க. ரத்தினம். முன் னணி மணல் ஒப்பந்ததாரர். புதுக் கோட்டை மாவட்டத்தை பூர்விகமா கக் கொண்ட இவர், மணல் தொழில் மட்டுமன்றி, மனை வணிகம், கல்வி நிறுவனங்கள், செங்கல்சூளை உள் ளிட்ட பல்வேறு தொழில்களை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், திண்டுக்கல், தேனி மாவட்டங்களைச் சேர்ந்த ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு போலீஸார் ரத்தினத்தின் வீடு கள், அதே சாலையிலுள்ள அலு வலகம் ஆகியவற்றில் வெள்ளிக்கி



திண்டுக்கல் ஜிடிஎன் சாலையிலுள்ள ரத்தினத்தின் வீட்டின் முன் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட போலீஸார்.

ழமை திடீர் சோதனை நடத்தினர். காலை 7 மணிக்குத் தொடங்கிய இந்தச் சோதனை, மாலை 4 மணி வரை நடைபெற்றது.

இந்தச் சோதனையின் போது, மணல் குவாரிகள் தொடர்பான சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்ட தாகக் கூறப்படுகிறது. ரத்தினத்தின் இளைய மகன் வெங்கடேஷ், திண் டுக்கல் மாநகராட்சியின் 17-ஆவது வார்டு மாமன்ற உறுப்பினராக உள் ளார். சுயேச்சையாகப் போட்டி யிட்டு வெற்றி பெற்ற இவர், பின்னர் திமுகவில் இணைந்தார்.

இதனிடையே, கடந்த சில மாதங் களுக்கு முன்பு வெங்கடேஷ் திமு கவிலிருந்து விலகி தவெகவில் இணைந்தார். இந்த நிலையில், ரத் தினத்தின் வீட்டில் ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் சோதனை நடத்தி யது அரசியல் பிரமுகர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், கடந்த 2023-ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் ரத்தி னத்தின் வீட்டில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

குதிரை பேரத்தை தொடங்கி வைத்ததே தவெகதான்



தூத்துக்குடி, நவ. 6: தமிழகத்தில் குதிரை பேரத்தைத் தொடங்கி வைத்ததே தவெகதான் என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம்சாட் டினார்.

சென்னையிலிருந்து விமானம் மூலம் தூத் துக்குடி வாகைக்குளம் விமான நிலையத் துக்கு வெள்ளிக்கிழமை வந்த அவர், செய்தி யாளர்களிடம் கூறியதாவது:

கரூர் பசுபதீஸ்வரர் கோயிலுக்குச் சொந்த மான 3,000 ஏக்கர் நிலங்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கி றது. இந்த முறைகேடு தகவலை முதலில் நான்தான் வெளிப்ப டுத்தினேன். தற்போது நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித் துள்ளது. கடந்த திமுக ஆட்சியில் கோவை பெரியார் அறிவு லகத்துக்கு புத்தகங்கள் கொள்முதல் செய்ததில் ஊழல் நடந்தி ருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. திமுக மீது குற்றம்சாட் டும் தவெகவினரும் தற்போது ஊழலை செய்துள்ளனர்.

தமிழகத்தில் குதிரை பேரத்தைத் தொடங்கி வைத்ததே தவெகதான். அதனால், இரு தொகுதிகளில் இடைத்தேர்தல் கள் நடந்து முடிந்திருக்கிறது. திமுக ஆட்சியைவிட தவெக ஆட்சியில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துவிட்டது. போதைப்பொருளைக் கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது. சட்டம்-ஒழுங்கு சரியில்லை. 350-க்கும் மேற்பட்ட கொலை, கொள்ளை உள்ளிட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. எதற்காக தவெகவுக்கு வாக்களித்தோம் என்று மக்கள் சிந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மீனவர்களைக் காப்பாற்ற தவெக அரசு உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும். ஈரானில் போர் நடைபெற்றபோது அங்கு சிக்கிய 742 தமிழர்களை பிரதமர் மோடி 20 மணி நேரத்தில் பாதுகாப்பாக மீட்டு தமிழகத்துக்கு அழைத்துவந் தார். மீனவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பது மத்திய அரசு மட்டும்தான் என்றார் அவர்.

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 8 மீனவர்கள் சென்னை வந்தனர்

ராமேசுவரத்துக்கு அனுப்பிவைப்பு

சென்னை, நவ. 6: இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ராமேசுவரத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள், விமானம் மூலம் வெள் ளிக்கிழமை சென்னை வந்தடைந்தனர். அவர்களை மீன்வ ளத் துறை அதிகாரிகள் வரவேற்று, சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

ராமேசுவரத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் கடந்த அக்.3-ஆம் தேதி விசைப்படகில் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி, 9 பேரையும் கைது செய்தனர். அவர்களது விசைப்படகு, மீன்பிடி வலைகள், பிடித்து வைத்திருந்த மீன்கள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர்.

இதையடுத்து, மீனவர்கள் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதற் கிடையே, படகை ஓட்டிச் சென்ற மீனவர் ஏற்கெனவே ஒரு முறை இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருந் ததால், இரண்டாவது முறையாகப் பிடிபட்ட அவருக்கு 3 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவர் தொடர்ந்து யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.

இதனிடையே, மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அர சுகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தின. இதன் தொடர்ச்சியாக, கடந்த அக்.30-இல் 8 மீனவர்களையும் இலங்கை நீதிமன்றம் விடுவித்தது.

அவர்கள் இந்தியத் தூதரக அதிகாரிகளின் உதவியுடன் கொழும்பிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்தனர். அவர் களை மீன்வளத் துறை அதிகாரிகள் வரவேற்று, அரசு ஏற்பாடு செய்த வாகனத்தில் ராமேசுவரத்துக்கு அனுப்பி வைத்தனர்.

ஜெம் வீரமணி வழக்கு: அரசு வழக்குரைஞர்கள் நியமனம்

சென்னை, நவ.6: ஜெம் கிரா னைட்ஸ் நிறுவன உரிமை யாளர் வீரமணிக்கு எதிரான 7 போக்ஸோ வழக்குகளில் காவல் துறை தரப்பில் ஆஜ ராக 3 அரசு சிறப்பு வழக்குரை ஞர்களை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டது.

சிறுமிகளை பாலியல் வன் கொடுமை செய்ததாக, ஜெம் கிரானைட்ஸ் நிறுவன உரிமை யாளர் வீரமணிக்கு எதிராக 7 போக்ஸோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்கில், வீரமணி, அவருக்கு உடந்தையாக இருந்த சாந்தி அவரது கணவர் மகேந்திர சிம்ஹன், வீரமணி யின் உதவியாளர் கணேசன் உள்ளிட்டோர் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

ஜெம் வீரமணிக்கு எதிரான வழக்குகளை சிறப்பு புலனாய் வுக் குழு விசாரித்து வருகிறது. ஜெம் வீரமணிக்கு எதிரான வழக்குகள் போக்ஸோ சிறப்பு நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவை யில் உள்ளன.

இந்த வழக்குகளில் விரை வில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என சிறப்பு புல னாய்வுக் குழு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள் ளது.

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் - ராதிகா, 2 வது தளம், ஸ கார்டன், நவ்ரங்புரா, அஹமதாபாத் - 09

கிளை அலுவலகம் - HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட், எண். 50, II வது தளம், VMR காம்ப்பாக்ஸ், வசந்தா நகர், புறவழிச்சாலை, ஆண்டார்புரம், மதுரை - 625 003

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

(கடன்தாரர் / கூட்டு - விண்ணப்பதாரர் / பொது மக்களுக்கு) (சர்ஃபாசி சட்டம் 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - விதி 9(1) ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு நிதிசொத்து பரிசீலனைப்பு, பிணைக்காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழ் இதன் கீழ்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை "இருக்கின்ற இடத்தில்" & "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்கும் உரிமையுடன் கலாதினம் எடுத்துள்ளார்.

விண்ணப்தாரர் & கூட்டு விண்ணப்தாரர் பெயர் மற்றும் முகவரி - (1) விண்ணா மரிசை, விண்ணா மரிசை, 73, எனாமல் ஃபேக்டரி சாலை (மேட்டுப்பட்டி) திண்டுக்கல், திண்டுக்கல் - 624 001 தமிழ்நாடு. மேலும் - T.S. எண். 1466/9, T.S வார்டு எண். 05, பழைய எண். 151 புதிய கதவு எண். 67, எனாமல் ஃபேக்டரி சாலை, எக்ஸ்-ஸ்ரே பார்ப், மேட்டுப்பட்டி தெரு, திண்டுக்கல் - 624001. மேலும் : 63, எனாமல் ஃபேக்டரி சாலை, மேட்டுப்பட்டி, பேகம்பூர், திண்டுக்கல், திண்டுக்கல் - 624 001 தமிழ்நாடு. (2) விஜயா ஃபினோமினல் S, 63, எனாமல் ஃபேக்டரி சாலை, எக்ஸ்-ஸ்ரே பகுதி, மேட்டுப்பட்டி, பள்ளப்பட்டி, திண்டுக்கல், திண்டுக்கல் - 624 001 தமிழ்நாடு. (3) ஞ்சியாஸ M, 63, எனாமல் ஃபேக்டரி சாலை, எக்ஸ்-ஸ்ரே பகுதி, மேட்டுப்பட்டி, பள்ளப்பட்டி, திண்டுக்கல், திண்டுக்கல் - 624 001 தமிழ்நாடு. (4) விளிபிபீ அமல S, 154/2, தெற்கு தெரு, கரிசல்பட்டி, பழநிதாண்டியாடி, திண்டுக்கல், கன்னியாடி - 624705 தமிழ்நாடு. (5) விளிபிபீ அமல S, எண். 63, எனாமல் ஃபேக்டரி சாலை, எக்ஸ்-ஸ்ரே பகுதி, மேட்டுப்பட்டி, பள்ளப்பட்டி, திண்டுக்கல், திண்டுக்கல் - 624 001 தமிழ்நாடு. (6) விளிபிபீ அமல மதன்பால், எண். 63, எனாமல் ஃபேக்டரி சாலை, எக்ஸ்-ஸ்ரே பகுதி, மேட்டுப்பட்டி, பள்ளப்பட்டி, திண்டுக்கல், திண்டுக்கல் - 624 001 தமிழ்நாடு.

கடன் கணக்கு எண். 23334550, 37004630,51025906. மொத்த நிலுவைத்தொகை : 30.11.2026 ம் தேதியின் படி, ரூ. 14,13,432.17 + ரூ. 25,65,534.59 + ரூ. 18,87,883.25 = ரூ. 58,66,850.01 (ரூபாய். ஐம்பத்து எட்டு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து எட்நூற்று ஐம்பது மற்றும் ஐபசை ஒன்று மட்டும்) மற்றும் முழு தொகையையும் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி / நிலு செலவுகள் / செலவுகள் ஆகியன.

நாமின் பெற்று கடனாளிதருவருக்கு தெரிந்த (எதேனும் இருப்பின்) வில்லங்கங்களின் விபரங்கள் - இல்லை

அசையா சொத்துகளின் விபரங்கள் - ஜாமின் சொத்து I - திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், திண்டுக்கல் டவுன், வார்டு எண். 5, பிளாக் எண். 2, பேகம்பூர், நத்தர்ஷா தெரு, பழைய டவுன் சர்வே எண். 124 ல் உள்ள 1 ஏக்கர் 1970 சதுர அடி., இதில் தெற்கு பாதி பாகம் 22765 சதுர அடி இதில் தென்மேற்கு மூலை பாகம் நீங்கலாக, மீதம் வடக்கு பாகமாக டவுன் சர்வே எண். 124/1 Part, புதிய டப்பிரிவு சர்வே எண். 124/23 ல் உள்ள 765 சதுர அடி அளவு 71.10 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - புதிய T.S. எண். 124/21 Part (இதில் உள்ள இனம் எண். 2) ல் உள்ள சொத்து, கிழக்கு - புதிய T.S. எண். 124/22 ல் M.V. ஷேக் மொஹம்மதுக்கு சொந்தமான உள்ள சொத்து, தெற்கு - புதிய T.S. எண். 124/33 பகுதியில் உள்ள 12 அடி அகல கிழமேல் சாலை, மேற்கு - புதிய T.S. எண். 124/24 ல் ஆயிஷாபானுக்கு சொந்தமான உள்ள சொத்து,, இதன் மத்தியில் உள்ள சொத்தின் அளவுகளாவன - கிழமேல் வடக்கு 26 அடி., தெற்கு 23-3/4 அடி., தென்கடல் கிழக்கு 30 அடி., மேற்கு 31-1/2 அடி., என மொத்தம் 7665 சதுர அடி அளவு 71.10 சதுர மீட்டர்.

ஜாமின் சொத்து - II - திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், நகர்நாயக்கன்பட்டி சார்பதிவு அலுவலகம், திண்டுக்கல் டவுன், வார்டு எண். 5, பிளாக் எண். 2, பேகம்பூர், நத்தர்ஷா தெரு, பழைய டவுன் சர்வே எண். 124 ல் உள்ள 1 ஏக்கர் 1970 சதுர அடி., இதில் தெற்கு பாதி பாகம் 14562 சதுர அடி இதில் வடக்கு பாகம் நீங்கலாக, மீதம் தெற்கு பாகமாக டவுன் சர்வே எண். 124/1 Part, புதிய டப்பிரிவு சர்வே எண். 124/21 ல் உள்ள 674 சதுர அடி பரப்பளவு கொண்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - புதிய T.S. எண். 124/21 Part ரஷிதா க/பெ அப்துல் மாலிக் என்பவருக்கு சொந்தமான உள்ள சொத்து மற்றும் கிழமேல் காம்பவுண்ட், கிழக்கு - கிழமேல் கல்வாய் மற்றும் புதிய T.S. எண். 124/21 ல் உள்ள சொத்து, மேற்கு - திரு T.S. எண். 124/21 பகுதியில் M. பரிஷா பேகத்துக்கு சொந்தமான சொத்து மற்றும் தென்கடல் பொது சந்து, தெற்கு - மின்னஞ்சல் :- lequiddoctors@gmail.com : புதிய T.S. எண். 124/23 (இதில் உள்ள இனம் எண். 1 சொத்து) ல் உள்ள சொத்து மற்றும் புதிய T.S. எண். 124/24 ல் ஆயிஷாபானுக்கு சொந்தமான உள்ள சொத்து, இதன் மத்தியில் உள்ள சொத்தின் அளவுகளாவன - கிழமேல் வடக்கு 22 அடி., தெற்கு 22 அடி., தென்கடல் கிழக்கு 24-1/4 அடி., மேற்கு 20-1/4 அடி., என மொத்தம் 489-1/2 சதுர அடி., இதில் கிழக்கு புறம், 2 வது பாகத்தின் தெற்கு பு சொத்தின் அளவுகளாவன - கிழமேல் வடக்கு 7-1/2 அடி., தெற்கு 7-1/2 அடி., தென்கடல் கிழக்கு 17-3/4 அடி., மேற்கு 17-3/4 அடி., என மொத்தம் 133-3/4 சதுர அடி., இதில் 3 வது பாகத்தின் வடக்கு பு சொத்தின் அளவுகளாவன - தென்கடல் மேற்கு 6-1/2 அடி., கிழக்கு (குறுக்கு) கிழக்கு 11-3/4 அடி., கிழமேல் வடக்கு மற்றும் தெற்கு 7-1/2 அடி., என முக்கோண வடிவில் உள்ள சொத்து மற்று 24-3/4 சதுர அடி. ஆக 1 முதல் 3 பாகங்கள் சேர்த்து மொத்த பரப்பு 647 சதுர அடி அதாவது 60.14 சதுர மீட்டர்., என பட்டியலில் குறிப்பிட்டப்பட்ட சொத்துக்களில் இனம் எண்கள். 1 மற்றும் 2 ஆகியன சேர்த்து மொத்தம் 1412 சதுர அடி பரப்பளவு கொண்ட சொத்து., இதில் கட்டப்பட்ட கதவு எண். 64/1, நடார்ஷா தெரு, வசி விதிப்பு எண். 901349 மற்றும் அதனுடன் கூடிய இதர உடைமைகள் மற்றும் வைப்புத்தொகைகள் மற்றும் அனைத்து இதர வசதிகள் மற்றும் அனைத்து பாதை உரிமைகள். மேற்சொன்ன சொத்து திண்டுக்கல் டவுன் எல்லைக்குள் அமைந்துள்ளது.

அடிப்படை விலை	டெபாசிட்தொகை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	டெபாசிட்தொகை செலுத்த வடகரி தேதி & நேரம்	ஏல தேதி & நேரம்
ரூ. 58,89,300/-	ரூ. 5,88,930/-	ரூ. 1,00,000/-	07.12.2026 மாலை 06.00 மணி வரை	08.12.2026 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் -

1). ஏல விற்பனையானது வலைதளம் https://www.bankeauctions.com மூலம் "Online e-auction" வாயிலாக இதன் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் எண்ணிடங்கள் 5 நிமிட கால நீட்டிப்புடன் நடத்தப்படும். 2). விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டெபாசிட்தொகையை வலைதளம் : https://www.bankeauctions.com மூலம் பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். (பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தங்களது பெயரை வலைதளம் https://www.bankeauctions.com ல் பதிவு செய்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்). அடிப்படை விலையின் 10% தொகையை டெபாசிட்தொகையாக பே ஆர்டர் மூலம் "HDB Financial Service Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை மூலம் செலுத்த வேண்டும். ஏலதாரரால் வலைதளத்தில் தம்மை பதிவு (ஒரு முறை) செய்த பிறகு, விருப்பமுள்ள ஏலதார் / வாங்குபவர் பின்வரும் ஆவணங்களில் தகல்களை, விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரத்துக்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும். அவையாவன - (i). NEFT/ RTGS சலான் அல்லது கேட்பு வரைவோலை நகல், ii). நிரந்தர கணக்கு அட்டை., iii). அடையாள சான்று / முகவரி சான்று (KYC) ஆதாரவு வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / கடவுச்சீட்டு போன்றவை. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஏலத்தில் வரும் விலைப்புள்ளிகள் தன்மையை செய்யப்படும். முறையாக நிரப்பப்பட்டு, கையொப்பமிட்டு பிற்சேர்க்கை II & III ஆகியவற்றில் ஒளிவருப்பட்டு பதிவேற்றம் செய்யப்படும் நகல்களை வலைதளம் https://www.bankeauctions.com லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உள்ளது உள்ளபடி மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலை, தகவல்களை பதிவேற்றம் செய்வதிலை விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதிலை, பயிறி / ஆன்லைன் உள்ளுரு விலைபோழ்வுக்கான செய்முறை விளக்கம் பெறுவதிலை உதவி தேவைப்படும் விருப்பமுள்ள ஏலதார்கள், M/s. C1 India Pvt Ltd., உத்தோக் விஹார், பேஸ் 2, கல்கிப் பெட்ரோலிய பிங்கிரி, எண். 301, குர்கான், ஹரியானா - 122 015 மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com உதவிக்கான எண்கள் - 124 4302020/21/22/23, 7291981124 / 1125 / 1126, விற்பனை விளாவனைகளுக்கு - sales@bankeauctions.com , 7291981129. 3). ஏலத்திற்கு விருப்பமுள்ள ஏலதார்கள் தேரில் ஆஜராகி தனிப்பட்ட முறையில் அல்லது அவரது அதிகாரமளிப்பு சீட்டு/ நிரந்தர கணக்கு அட்டை எண்/GST சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்

2. வெற்றி பெற்ற ஏலதார்கள் மொத்தத் தொகையையும் RTGS மூலம் செலுத்த வேண்டும்.

Place: Kaloor,
Date: 07/11/2026.

Authorised Officer,
Muthoot MCred Limited

தமிழ்நாடு அரசு

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தேர்வுநிலை பேரூராட்சி

நகலன்.183/2026/அ1 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் : 06.11.2026

திருச்சிராப்பள்ளி மண்டலம் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் **2026–2027 ம் ஆண்டு முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் (CM IUDM)** கீழ் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வ. எண்.	வேலையின் பெயர்	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	டெபாணி தொகை (ரூபாயில்)
1	கம்பர் தெரு (தோனிகிரசல் பள்ளி பெயில்), தென்றல் நகர் –I, தென்றல் நகர் –II, தென்றல் நகர் –III, தென்றல் நகர் –IV, கேக நகர்– I, கேக நகர்– II, தேரோடும் வீதி வீதி – III, (குச்சா ரோடு) ஆகிய மண் சாலைகளை தார்சாலையாக மாற்றுதல்	174.00	1,74,000/-

ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **25.11.2026** பிற்பகல் **3.00** மணி வரை https://tntenders.gov.in http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரியில் இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

1. தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து இணையதளம் வழியில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.
2. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள பணிக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டெபாணித் தொகையை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் செலுத்த வேண்டும்.
3. இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரில் விளாரித்து தெரிந்து கொள்ளலாம்.

மு.சசி
தலைவர், ஆலங்குடி தேர்வுநிலை பேரூராட்சி

ஆ.சிவசாமி
செயல் அலுவலர், ஆலங்குடி தேர்வுநிலை பேரூராட்சி

SMFG Grihashakti

SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்.

பெருநிறுவன அலுவலகம்: 9338,504,5,ஆவது தளம்,G-பிளாக், இன்டர்ஸ் BKC,BKC பிரதான சாலை, பாந்த்ரா குர்லா காம்ப்லெக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை-400051. பதிவு அலுவலகம்: கமர்னேனி ரீ பார்க், பேஸ் 5,1,ஆவது தளம், எண் 111, பவுண்ட் ரூத்லாஸ் சாலை, பேரூர், சென்னை-600116, தமிழ்நாடு.

அசையாச் சொத்துக்கான சுவாதீன அறிவிப்பு [(பிற்சேர்க்கை IV) விதி 8(1)]

கடனீட்டுச் சொத்துக்களை சொக்கவாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம்,2002(2002-இன் 54)-இன் கீழ், தேசிய வீட்டுவசதி வங்கியில் (இந்திய ரிசர்வ் வங்கியுடன் முழுமுதல் சொந்தமானது) முறையாகப் பதிவு செய்யப்பட்ட வீட்டுவசதி நிதி நிறுவனமான SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிட் (இனிமேல் "SMHFC" எனக் குறிப்பிடப்படும்)-இன் அதிகாரப்பூர்வ அலுவலான கீழ் கையொப்பமிட்டுள்ளவர், கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள்,2002-இன் விதி 3-உடன் சேர்த்து படிக்கப்படும் மேற்படிய சட்டத்தின் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்படிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் கோரிக்கை அறிவிப்பை அனுப்பி, கடன்தாரர்களாகிய நீங்கள் (பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன), அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைப் அதன் மீதான வட்டியையும், மேற்படிய அறிவிப்பைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள்,2002-இன் விதி 8-உடன் சேர்த்துப் படிக்கப்படும் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13-இன் உட்பிரிவு (4)-இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே கையொப்பமிட்டுள்ளவர் இங்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தைச் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார் என்பதை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கிறார். குறிப்பாக மேற்கூறிய கடன்தாரர்களும் பொதுவாக பொதுமக்களும், மேற்கூறிய சொத்து தொடர்பாக எவ்விதப் பரிவர்த்தனையும் மேற்கொள்ளவோ வேண்டாமென இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். அச்சொத்து தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் அதன் மீதான வட்டிக்கான "SMHFC"-இன் பற்று உரிமைக்கு உட்பட்டதாகும்.

கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) பெயர் மற்றும் கடன் கணக்கு எண்	கடனீட்டுச் சொத்துக்களின் விபரம் (அசையாச் சொத்து)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	நேரடி வசமான நாள்
LAN:61923921179700 2&619239511797920 1. சந்திரன் C 2. ராஜலட்சுமி சந்திரன்	கடனீட்டுச் சொத்துக்களின் விபரம் (அசையாச் சொத்து) இனம் எண் 1: விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், சேத்தூர் சார்பதிவு அலுவலகம், நல்லமங்கலம் கிராமத்தில், சர்வே எண் 79/4ஆ, புதிய நத்தம் சர்வே எண் 105/78-இல் அடங்கிய,241.312 சதுர அடி (22.418 சதுர மீட்டர்) பரப்பளவுள்ள வீட்டுமனையும், அதில் அமைந்துள்ள கதவு எண் 2/110 மற்றும் வரித்தீர்வை எண் 232 கொண்ட RCC வீட்டுக் கட்டடமும். எல்லைகள்:வடக்கு:V.சினன்தமுனாக்குச் சொந்தமான காலி நிலம்;கிழக்கு: திரு.சந்திரனுக்குச் சொந்தமான காலி நிலம்;மேற்கு: திருமதி.சிவஞ்சியம்மாளுக்குச் சொந்தமான வீடும் பெதுச் சந்தும்;தெற்கு: திராவிட முன்னேற்றக் கழகத்துக்குச் சொந்தமான காலி நிலம். அளவுகள்: கிழமேல் வடபுறம் 14.75 அடி, கிழமேல் தென்புறம் 14.50 அடி, தென்கடல் மேல்புறம் 16.50 அடி, தென்கடல் கீழ்புறம் 16.50 அடி, பரப்பளவு 241.312 சதுர அடி. இனம் எண் 2: விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், சேத்தூர் சார்பதிவு அலுவலகம், நல்லமங்கலம் கிராமம், நல்லமங்கலம் ஊராட்சி, வார்டு எண் 2, பிள்ளையார் கோவில் தெருவில், பழைய நத்தம் சர்வே எண் 79/4ஈ, புதிய நத்தம் சர்வே எண் 105/79-இல் அடங்கிய,1106.375 சதுர அடி (102.784 சதுர மீட்டர்) பரப்பளவுள்ள வீட்டுமனையும், அதில் அமைந்துள்ள கதவு எண் 2/110 மற்றும் வரித்தீர்வை எண் 232 கொண்ட RCC வீட்டுக் கட்டடமும். எல்லைகள்:வடக்கு: பிள்ளையார் கோவில் தெரு; கிழக்கு: